உ
சிவமயம்
ஶ்ரீ மஹாதேவ ஜயம்

ஶ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர்கள் அருளிய

॥ शिवनामावल्यष्टकम् ॥

॥ ஶிவநாமாவல்யஷ்டகம் ॥

தமிழ் உரை:
தர்மக்ஞ, சிரோமணி, வித்யாவாசஸ்பதி, பிரம்மஶ்ரீ
மாயூரம் **ராமநாத தீக்ஷிதர்** அவர்கள்

हे चन्द्रचूड मदनान्तक शूलपाणे
स्थाणो गिरीश गिरिजेश महेश शम्भो ।
भूतेश भीतभयसूदन मामनाथं
संसार दुःखगहनाज्जगदीश रक्ष ॥ १ ॥

ஹே சந்த்3ரசூட3 மத3னாந்தக ஶூலபாணே
ஸ்தா2ணோ கி3ரீஶ கி3ரிஜேஶ மஹேஶ ஶம்போ4 ।
பூ4தேஶ பீ4தப4யஸூத3ன மாமநாத2ம்
ஸம்ஸார து3:க2க3ஹனாஜ்ஜக3தீ3ஶ ரக்ஷ ॥ 1 ॥

சந்திரனைச் சிரஸில் தரித்தவரே, காமனை அழித்தவரே. சூலத்தைத் தரித்தவரே, அசைவற்றவரே, மலையில் வசிப்பவரே, மலைமகளின் கணவரே, மஹேச்வரரே, ஸுகங்கள் எல்லாவற்றிற்கும் இருப்பிடமானவரே, பூதங்களின் பதியே, பயத்தைப் போக்குபவரே. உலகிற்கெல்லாம் ஈசரே, நாதனற்ற என்னை ஸம்ஸாரத்திலுள்ள பயங்கர துக்கத்தினின்றும் காக்க வேண்டும்.

हे पार्वतीहृदय वल्लभ चन्द्रमौले
भूताधिप प्रमथनाथ गिरीशचाप ।
हे वामदेव भव रुद्र पिनाकपाणे
संसार दुःखगहनाज्जगदीश रक्ष ॥ २ ॥

ஹே பார்வதீஹ்ருத3ய வல்லப4 சந்த்3ரமௌலே
பூ4தாதி4ப ப்ரமத2நாத2 கி3ரீஶசாப ।
ஹே வாமதே3வ ப4வ ருத்3ர பினாகபாணே
ஸம்ஸார து3:க2க3ஹனஜ்ஜக3தீ3ஶ ரக்ஷ ॥ 2 ॥

பார்வதியின் மனத்திற்குப்ரியமானவரே, சந்திரனைச் சிரஸில் தரித்தவரே, பூதங்களுக்கும் ப்ரமத கணங்களுக்கும் அதிபரே, மேருவை வில்லாகக் கொண்ட வரே, மிக அழகு வாய்ந்த தெய்வமே எங்கும் ஸத் ரூபியாய் நிறைந்தவரே. துக்கத்தையும் அதன் காரணத்தையும் அழிப்பவரே, பிணகத்தைத் தரித்தவரே, உலகிற்கெல்லாம் ஈசரே, என்னை ஸம்ஸாரத்திலுள்ள பயங்கர துக்கத்தினின்றும் காக்க வேண்டும்.

हे नीलकण्ठ वृषभध्वज पञ्चवक्त्र
लोकेश शेपवलय प्रमथेश शर्व 1
हे धूर्जटे पशुपते गिरिजापते मां
संसार दुःखगहनाज्जगदीश रक्ष ॥ ३ ॥

ஹே நீலகண்ட2 வ்ருஷப4த்4வஜ பஞ்சவக்த்ர
லோகேஶ ஶேபவலய ப்ரமதே2ஶ ஶர்வ 1
ஹே தூ4ர்ஜடே பஶுபதே கி3ரிஜாபதே மாம்
ஸம்ஸார து3:க2க3ஹனஜ்ஜக3தீ3ஶ ரக்ஷ ॥ 3 ॥

நீலகண்டரே, வ்ருஷபத்தைக் கொடியாகக்கொண்டவரே, ஐந்து முகமுள்ள வரே. உலகத்திற்குப் பதியே, ஆதிசேஷனை வளையாகத் தரித்தவரே, ப்ரமத கணங்களின் தலைவரே, பாபங்களைப் போக்குபவரே, தூர்ஜடே, பசுபதே, மலைமகளின் பதியே, உலகிற்கெல்லாம் ஈசரே, என்னை ஸம்ஸாரத்திலுள்ள பயங்கர துக்கத்தினின்றும் காக்கவேண்டும்.

हे विश्वनाथ शिव शङ्कर देवदेव
गङ्गाधर प्रमथनायक नन्दिकेश |
बाणेश्वरान्धकरिपो हर लोकनाथ
संसारदुःखगहनाज्जगदीश रक्ष ॥ ४ ॥

ஹே விஶ்வநாத² ஶிவ ஶங்கர தே³வதே³வ
க³ங்கா³த⁴ர ப்ரமத²நாயக நந்தி³கேஶ ।
பா³ணேஶ்வராந்த⁴கரிபோ ஹர லோகநாத²
ஸம்ஸார து³:க²க³ஹனாஜ்ஜக³தீ³ஶ ரக்ஷ ॥ 4 ॥

விச்வநாதரே, சிவபெருமானே, சங்கரனே, தேவதேவ, கங்காதர, ப்ரமத நாயகரே, நந்திகேச, பாணனுக்கு ஈசரே, அந்தகனைக் கொன்றவரே, ஹர, உலகத்திற்கு நாதரே, ஜகதீச, நாதனற்ற என்னை ஸம்ஸாரத்திலுள்ள பயங்கர துக்கத்தினின்றும் காக்க வேண்டும்.

वाराणसीपुरपते मणिकर्णिकेश
वीरेश दक्षमखकाल विभो गणेश ।
सर्वज्ञ सर्वहृदयैकनिवास नाथ
संसार दुःखगहनाज्जगदीश रक्ष ॥ ५ ॥

வாராணஸீபுரபதே மணிகர்ணிகேஶ
வீரேஶ த³க்ஷமக²கால விபோ⁴ க³ணேஶ ।
ஸர்வஜ்ஞ ஸர்வஹ்ருத³யைகநிவாஸ நாத²
ஸம்ஸார து³:க²க³ஹனாஜ்ஜக³தீ³ஶ ரக்ஷ ॥ 5 ॥

காசி பட்டிணத்திற்குத் தலைவரே, மணிகர்ணிகாபதே, வீரர்களுக்கு ஈசனே, தக்ஷனின் யாகத்தை அழித்தவரே, விபுவே. கணங்களுக்கு அதிபரே, எல்லா மறிந்தவரே, உலகமெல்லாவற்றிற்கும் இருப்பிடமே, நாதனற்ற என்னை ஸம்ஸாரத்திலுள்ள பயங்கர துக்கத்தினின்றும் காக்கவேண்டும்.

श्रीमन्महेश्वर कृपामय हे दयालो
हे व्योमकेश शितिकण्ठ गणाधिनाथ ।
भस्माङ्गराग नृकपालकलापमाल
संसार दुःखगहनाज्जगदीश रक्ष ॥ ६ ॥

ஶ்ரீமன்மஹேஶ்வர க்ருபாமய ஹே த³யாலோ
ஹே வ்யோமகேஶ ஶிதிகண்ட² க³ணாதி⁴நாத² ।
ப⁴ஸ்மாங்க³ராக³ ந்ருகபாலகலாபமால
ஸம்ஸார து³:க²க³ஹனாஜ்ஜக³தீ³ஶ ரக்ஷ ॥ 6 ॥

ஸ்ரீமன் மஹேச்வர, கருணையுருவமே, தயாளுவே, வ்யோமகேச, கறுத்த கண்டமுள்ளவரே, கணங்களின் அதிபரே, விபூதியை அணிந்தவரே, மனித கபாலத்தைத் தரித்தவரே, கபாலங்களை மாலையாக அணிந்தவரே, என்னை ஸம்ஸாரத்திலுள்ள பயங்கர துக்கத்தினின்றும் காக்க வேண்டும்.

कैलाश शैलविनिवास वृपाकपे हे
मृत्युञ्जय त्रिनयन त्रिजगन्निवास ।
नारायणप्रिय मदापह शक्तिनाथ
संसार दुःखगहनाज्जगदीश रक्ष ॥ ७ ॥

கைலாஶ ஶைலவிநிவாஸ வ்ருபாகபே ஹே
ம்ருத்யுஞ்ஜய த்ரிநயன த்ரிஜக3ந்நிவாஸ ।
நாராயணப்ரிய மதா3பஹ ஶக்திநாத2
ஸம்ஸார து3:க2க3ஹனாஜ்ஜக3தீ3ஶ ரக்ஷ ॥ 7 ॥

திருக்கயிலாயமலையில் வசிப்பவரே, வ்ருஷாகபியே, ம்ருத்யுஞ்சயரே, முக்கண் படைத்தவரே, மூவுலகத்திலும் வசிப்பவரே, நாராயணனின் நண்பரே, மதத்தைப் போக்குபவரே. பராசக்தியின் பதியே, என்னை ஸம்ஸாரத்திலுள்ள பயங்கர துக்கத்தினின்றும் காக்க வேண்டும்.

विश्वेश विश्वभवनाशक विश्वरूप
विश्वात्मक त्रिभुवनैकगुणाधिकेश ।
हे विश्वनाथ करुणामय दीनबन्धो
संसार दुःखगहनाज्जगदीश रक्ष ॥

விஶ்வேஶ விஶ்வப4வநாஶக விஶ்வரூப
விஶ்வாத்மக த்ரிபு4வனைககு3ணாதி4கேஶ ।
ஹே விஶ்வநாத2 கருணாமய தீ3னப3ந்தோ4
ஸம்ஸார து3:க2க3ஹனாஜ்ஜக3தீ3ஶ ரக்ஷ ॥

உலகத்திற்கு அதிபரே, உலகில் பிறவிப் பிணியைப் போக்குபவரே, உலகத்தையே உருவமாய் கொண்டவரே, உலக ரூபியே, மூவுலகத்திலும் மிகவும் குணமுள்ளவரே, உலக பந்துவாயும் கருணையுருவாயும் எளியவற்கு பந்துவாயுமுள்ளவரே, ஸம்ஸாரத்திலுள்ள பயங்கர துக்கத்தினின்றும் என்னைக் காக்க வேண்டும்.